DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

STC.No. 343/2025

Deposition of Witness : LW2/ PW5

| Name | சரண்ராஜ் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | பெருமாள் | Village | |
| Age | 38 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 26.**11.2025.** | | | |

( Accused present)

சாட்சியை பண்ருட்டி காவல் நிலைய இரண்டாம்நிலை காவலர் திரு.K. பிரசாத் Gr-II 1724 அவர்கள் அடையாளம் காட்டினார்.

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

**1.** நான் தற்போது பண்ருட்டியில், போலிஸ் லைனில் வசித்து, கார் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா-1, அ.சா-2 ஆகியோர்களை தெரியும், அவர்கள் கடலூர் சாலையில் பெட்ரோல் பங்க், பாலாஜி திருமண மண்டபம் எதிரில் உள்ள கார் ஸ்டாண்டில் ஓட்டுனராக உள்ளார்கள். நானும் மேற்சொன்ன கார் ஸ்டாண்டில் கார் ஓட்டுனராக இருந்து வருவதன் அடிப்படையில் அவர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை தெரியாது. எனக்கு இந்த வழக்கு சம்மந்தமாக எந்த விவரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

1. மேற்படி ஆஜர் எதிரி, நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள மேற்சொன்ன பண்ருட்டி-கடலூர் சாலையில், பாலாஜி திருமண மண்டபம் எதிரில் உள்ள அன்னை தெரசா கார் ஸ்டாண்டில் தான் கார் ஓட்டுனராக உள்ளார். மேற்படி கார் ஸ்டாண்டில் ஆஜர் எதிரி எனக்கு தெரிந்து கடந்த 8 வருடங்களாக கார் ஓட்டுனராக இருந்து வருகிறார். மேற்படி எதிரி மேற்சொன்ன நான் ஓட்டுனராக இருந்து வரும், மேற்சொன்ன கார் ஸ்டாண்டில் ஆஜர் எதிரியும் கடந்த 8 வருடங்களாக கார் ஓட்டுனராக இருந்துவரும் நிலையில், ஆஜர் எதிரி எனக்கு நன்கு தெரிந்திருந்தும், அவரை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காக, நான் எனது முதல் விசாரணையில் தெரியாது என்று பொய்யாக சொன்னேன் என்றால் சரியல்ல. மேற்படி கார் ஸ்டாண்டில் ஆஜர் எதிரி ஓட்டுனராக இருந்துவரும் நிலையில், நான் அவரிடம் இதுவரை எந்த பேச்சு வார்த்தையும் வைத்துக்கொண்டதில்லை என்பதால், நான் அவரை தெரியாது என்று சொன்னேன். மேற்படி கார்

ஸ்டாண்டில் ஆஜர் எதிரி ஓட்டுனராக இருந்துவரும் நிலையில், நானும், மேற்சொன்ன அதே கார் ஸ்டாண்டில் கார் ஓட்டுனராக இருந்துவரும் நிலையில், அவரிடம் இதுவரை எந்த பேச்சு வார்த்தையும் வைத்துக்கொண்டதில்லை என்றாலும், மேற்படி நானும், ஆஜர் எதிரியும் கார் ஓட்டுனராக மேற்படி கார் ஸ்டாண்டில் பல வருடங்களாக ஒன்றாக கார் ஓட்டுனராக இருந்துவரும் நிலையில், நாங்கள் இருவரும் நல்ல முறையில் பேசி, நல்ல நட்பு முறையில் இருந்துவருகிறோம் என்றாலும், மேற்படி வழக்கு சண்டையை நேரடியாக பார்த்து, சண்டையை விலக்கிவிட்டு தற்போது எதிரி எனக்கு மேற்சொன்ன வகையில், நன்கு பழக்கமானவர் என்பதால், அவரை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக அரசு தரப்பிலிருந்து விலகி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. போலிசார் விசாரித்தார்கள் என்றும் போலிஸ் விசாரணையில், பண்ருட்டி அன்னை தெரசா கார் ஸ்டாண்டின் தலைவராக சங்கர் உள்ள நிலையில், சங்கருக்கும், எதிரி ஸ்ரீதருக்கும் ஏற்கனவே பிரச்சனை ஏற்பட்டு, முன்விரோதம் இருந்து வந்தநிலையில், கடந்த 03.06.2024 அன்று காலை 6.20 மணியளவில் நானும், என்னுடன் எங்களது கார் ஸ்டாண்டின் கார் ஓட்டுனராக வேலை செய்யும் செல்வமும் மேற்படி கார் ஸ்டாண்டில் இருந்தபோது, தலைவர் சங்கர் அவரது காரை நிறுத்தி துடைத்துக்கொண்டிருந்தபோது, அங்கு வந்த ஸ்ரீதர் திடீரென்று சங்கரை பார்த்து அசிங்கமாக திட்டினார் என்றும், அதற்கு சங்கர், ஸ்ரீதரிடம் ஏன் என்னை அசிங்கமாக பேசுகிறாய் என்று கேட்டபோது, ஸ்ரீதர், சங்கரிடம் நீ என்னையே எதிர்த்து பேசுறியா என்று கேட்டு, அங்கு கீழே கிடந்த மூங்கில் கழியை எடுத்து, சங்கரின் முதுகில் அடித்தார் என்றும், பிறகு கையால் சங்கரின் மூக்கில் குத்தினார் என்றும், அதைப் பார்த்த நானும், என்னுடன் இருந்த செல்வமும் சண்டையை விலக்கிவிட்டோம் என்றும், பிறகு ஸ்ரீதர் அங்கிருந்து போகும்போது அவர் கையில் வைத்திருந்த மூங்கில் கழியை காட்டி சங்கரை பார்த்து இனிமேல், என்னிடம் வச்சுக்கிட்டா உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டிவிட்டு சென்றார் என்றும், பிறகு, சங்கருக்கு மூக்கில் இரத்தம் வந்ததால், அவர் சிகிச்சைக்கு பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு சென்றார் என்றும், இது சம்மந்தமாக பண்ருட்டி காவல் நிலைய உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்து, 04.06.2024 அன்று என்னை விசாரிக்க நான் நடந்ததை சொன்னேன் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்லிவிட்டு ஆஜர் எதிரி எனக்கு சுமார் பல வருடம் பழக்கமானவர் என்பதால், அவரை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக அரசு தரப்பிலிருந்து விலகியும், ஆஜர் எதிரிக்கு ஆதரவாகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை - இல்லை.**